26.02.2026

அ.வ.எண். 105/2020

**வா.சா.2 – திரு. ராமலிங்கம், த/பெ. சுப்பன்ன கவுண்டர்**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 26.02.2026 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரதிவாதி வீட்டின் கதவானது கிழமேல் ரோட்டில் தெற்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி தார் ரோட்டில் இருந்து 5 அடி உயரமாக தான் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் என்னுடைய நிலத்தில் ஆவணங்களை கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. ஏன் கொண்டு வரவில்லை என்றால் வெளியே இருந்தேன், அவசரமாக வந்தேன். வழக்கு சங்கதிகள் பற்றி எனக்கு தெரியும். க.ச.எண்.380, 381, 382 ல் எவ்வளவு பரப்பு உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 புகைப்படத்தில் கண்ட பாதை வழியாக தான் க.ச.எண்.380, 381, 382 காலைகளின் உரிமையாளர்கள் செல்கிறார்கள் என்றால் க.ச.எண்.380, 381 காலையின் உரிமையாளர்கள் செல்கிறார்கள், க.ச.எண்.382 காலை உரிமையாளர்கள் செல்கிறார்களா என்று சரியாக தெரியவில்லை.

2. க.ச.எண்.380, 381, 382 காலைகளின் உரிமையாளர்கள் வாதிகளை பி.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள பாதையை பயன்படுத்த தடுக்கவில்லை என்றால் க.ச.எண்.380, 381 காலைகளின் வழியாக தற்காலிகமாக செல்ல அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டு செல்கிறார்கள். பி.சா.ஆ.1 ல் கண்டுள்ள தடமானது சுமார் 80 ஆண்டுகளாக இருக்கும் என்றால் சுமார் 50 வருடங்களாக உள்ளது. பிரமாண வாக்குமூலம் பத்தி 3 ல், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.379/3 காலையில் மேற்கு வேலி ஓரமாக சுமார் 12 அடி அகலத்தில் வாதிகளின் பூமியை சென்றடையும் வரை தென்வடல் வண்டிப்பாதை உள்ளது என சொல்லியுள்ளேன் என்றும், அதன் பரப்பு எவ்வளவு என்று சொல்லவில்லை என்றால் சரியாக தெரியவில்லை. உண்மையாகவே, பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல், மேற்படி அகலத்தில் பிரதிவாதியின் இடத்தில் வண்டிப்பாதை இருந்திருந்தால் அதன் பரப்பு

மற்றும் நீளத்தை சரியாக சொல்லியிருப்பேன் என்றும், அவ்வாறு இல்லாத காரணத்தால் தான் என்னால் சரியாக சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல, அளந்து பார்க்கவில்லை, ஆனால் போய்க்கொண்டிருந்தது உண்மை ஆகும்.

3. எந்த வருடத்தில் இருந்து வண்டிப்பாதை இருந்தது என எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் பிரதிவாதிகள் வண்டிப்பாதையை மண்ணை கொட்டி அழிமானம் செய்தனர் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் வண்டிப்பாதை இருந்திருந்தாலும், நான் அங்கு வசித்து வந்திருந்தாலும் மேற்படி விவரங்களை சொல்லியிருப்பேன் என்றும், அவ்வாறு இல்லாததால் தான் மேற்படி விவரங்களை என்னால் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள தடத்தை பயன்படுத்தி தான் வாதிகளின் வீட்டையும், பூமியையும் அடைவது போன்று உள்ளது என்றால் சரிதான்.

4. வாதி வீட்டின் நான்குபுற எல்லை என்ன என்றால் கிழபுறத்தில் தென்கோடியில் என்னுடைய தடம் உள்ளது, கிழக்கு வடகோட்டில் எங்களுடைய எல்லை பூமி உள்ளது, மேற்கு வடகோட்டில் என் சித்தப்பாவின் பூமி உள்ளது, மேற்கு தென்கோட்டில் பிரச்சனைக்குரிய தடம் உள்ளது. 2000 - 2001 ம் ஆண்டில், பிரதிவாதியின் பூமியில் வண்டித்தடம் இருந்ததாக சொல்லும் இடத்தில், வாதிகள் அவர்கள் பூமியை அடைந்து வந்தார்கள் என்ற சங்கதியை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளின் பூமியில் தடம் செல்வது சம்மந்தமாக TOPO வரைபடம் மற்றும் புலப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் வண்டித்தடம் இருந்திருந்தால் அது சம்மந்தமாக ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

5. பிரதிவாதிகளின் பூமி க.ச.எண்.379/3 காலையில் உள்ளது. மேற்படி பூமியில் வாங்கியது முதல் நீண்ட காலமாக கோழிப்பண்ணை அமைத்து அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரிதான். க.ச.எண்.379/3 காலையில் வாதிகளின் பெயர் இல்லை என்ற விவரத்தை என்னிடம் சொல்லியுள்ளனர் என்றால் இல்லை.

ஆணையர் அறிக்கையில், பிரதிவாதிகளின் பூமியில் வாதிக்கு வண்டித்தடம் இல்லை என கூறிய விவரத்தை வாதி சொன்னாரா என்றால் இல்லை. வாதி எத்தனை அடி தடம் கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றும், பின்னிட்டு அதை திருத்தம் செய்தார் என சொன்னாரா என்றால் இல்லை. சுமார் 12 அடி அகலம் கொண்ட வண்டித்தடத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் வாதி சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரங்களை வாதி எனக்கு சொல்லியுள்ளார் என்றும், அதை தெரிந்துகொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. உண்மையில், வாதியின் பத்திரத்தில், பிரதிவாதிகளின் வண்டித்தடம் குறித்து குறிப்புகள் இல்லாததால் தான் என்னை அணுகி பொய் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் முன் உரிமையாளர்கள் விவரம் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் முடியும். மேற்படி சொத்து இதற்கு முன்பாக சோளக்காட்டுபாளையத்தை சேர்ந்து தாசன் என்பவரிடம் இருந்தது, அவரது இயற்பெயர் தெரியவில்லை, அதற்கு முன்பாக மோப்பிரிபாளையத்தை சேர்ந்த மருதாச்சலம் என்பவரிடம் இருந்தது. மேற்படி ஆவணங்களை பார்த்ததில்லை என்றால் சரிதான். வாதி சொன்னதன் பேரில் மேற்படி விவரங்களை சொல்கிறேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur